# ECUMENICAL SERVICE AT THE ASHRAM

The Jaffna Christian Union is planning to conduct an ecumenical service at Christa Seva Ashram Maruthanamadam on Saturday the 1st January 2000. The Anglicans, Methodists and C. S. I. Christians will assemble on the new years day to worship God in unison and prepare them selves for the new millennium.

There will be a con celebration of the Eucharist by Rev. K. Karunasegara, Rev. N. S P. Nesakumar and Rev. S. C. Arnold. The Bishop of the Jaffna Diocese C S. I. will preach at this service. Pastors and lay people from Pallai in the East and Delft in west are expected to assemble at the Ashram on this historic occasion.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 31st, December 1999 No. 25

*RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.*


## A CHRISTMAS MESSAGE

This letter brings heartiest good wishes to all of you from my Church.

Christmas reminds us of God becoming a man. As the followers of the Man called Jesus, keep the season of Advent and prepare for Christmas. It is good to ask the pertinent question whether the Church of God has during this year touched the lives of humanity in the midst of all the realities and brokenness.

To Many of us the Incarnation is a once and for all event and so we live with the manger, the shepherds, angels and wisemen. While these "symbols" bolster our faith, and also help make Christmas a happy event, they should not be sacrocant. The Incarnation is a daily event and if we live with this thought our Christianty will be all the richer and meaningful.

Emmanuel Means, "Christ among us" and that must be made true in our own experience; if it does happen, we are the most blessed of beings, and Christmas has become a meaningful celebration. If it does not, our rejoicing is meaningless.

May Gods love sorround you at Christmas and may his peace rule in your heart throughout the coming year.

**Rev. S. P. Nesakumar**

### *A Carol Service at Karainagar*

After many years a Carol service was conducted at the C S I Church, Karainagar, on 18th December 1999.

Many Navy personnel were also pre-sent.

Do you have a friend or relative to whom you would like to give a present for Christmas? Give him / her "The Morning Star".

Life Subscription :Foreign £ 100/

Annual Subscription : Foreign £ 10/-

Life Subscription Local Rs 1000/-

Annual Subscription Local Rs 100/-

Cheques can be drawn in favour of "The Morning Star" A / C No: 16400760 — 01 Commercial Bank, Colombo - 06.

And sent to :

Mr. N. S. P. Thampoe,
39, Fussels Lane,
Colombo 06

### *Doctors from South Sri Lanka Return*

41 Singhalese and Muslim doctors who were serving at the Teaching Hospital Jaffna and Manthihai Base Hospital, Point Pedro, returned to Colombo on Tuesday the 14th December 1999.

They have requested the Ministry of Health to send them back to their homes because of the outbreak of confliet in the Peninsula.

### *"Pathukavalan" Celebrates Christmas*

"Pathukavalan" the Tamil weekly of the Roman Catholic Church conducted a Christmas Party on Sunday the 12th of December 1999. Rev Fr. A. C Christopher and Rev. E. M. Jeyaseelan were the guests of honour at this function.

### *Attacked by Crocodile*

Mr. Sivarajah (age 32) was attacked by a crocodile at Varany on 11th of December 1999. He was walking to his paddy field where water was five feet deep when the crocodile came and caught him by his legs. He shouted for help and a man rushed to the spot and beat the crocodile with his mammoty. Mr. Sivarajah is undergoing treatment at Manthihai Hospital.

### Combianed Carol Service

The Roman Catholic Students and the christian Students Union conduted a Combined Carol Service. at the Kailasapathi Auditorium, at the University of Jaffna, on Wednesday the 15th December 1999. The theme of the Service was "Towards Jubilee".

### Chavakachcheri Deserted

Chavakachcheri Town was deserted from Monday the 13th of December 1999. There were no vehicles on the road, expect the transport buses. Very few people were working in the Government Offices.

### New Directoress of Education


Mrs. S. Mahalingam has been appointed as Directoress of Education of the Jaffna Zone. She is an Old Girl of Jaffna College, Vaddukoddai and had been Principal of Pandatherripu Girls' College.

### *Thirty Five Stray Dogs Killed*

Under the instruction of the Public Health Inspector, Chavakachcheri, thirty five stray Dogs were poisened to death. The stray dogs were causing rabies in the District.

### *Election Posters*

Election posters of both parties, P. A. and U N P appear in many parts of Jaffna. Blue flags and Green flags are seen in Jaffna Town.



*Morning Star & A. C. M. Press wish all readers A Bright, Prosperous and Peaceful New Year. May the Lord Almighty grant you, and all People in our country Peace and joy.*

# *New Year Special Issue*

## அமைதியின் தூதர் இயேசு

அன்புச் சகோதரங்களே,

இரட்சணிய வரலாற்றில் இயேசுக்கிறிஸ்து மனிதவுடலேற்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாயிரம் ஆண்டைக் கொண்டாட இறைமக்கள் காத்துள்ளார்கள். இறை மீட்புத்திட்டத்தில் திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய இயேசுக்கிறீஸ்து மனிதனான வரலாற்று நிகழ்வு, எமது விசுவாச மறைபொருளின் அடி நாதமாகும். இதனையே திருச்சபையானது திருவருகைக் காலத்தில் தியானிக்கின்றது. இயேசுவின் முதலாவது வருகையின் வரலாற்று நிகழ்வான பிறப்பையும், இயேசுவின் மகிமையான இரண்டாவது வருகையையும் தியானிப்பதோடு, இவ்வாண்டில் எமது உள்ளத்தில் இயேசு குடி கொள்ள எம்மை ஆயத்தம் செய்ய அழைப்பு விடுக்கின்றது.

அதிகமான வர்த்தகமயமாக்கலால் எமது மீட்பரின் பிறப்பு அர்த்தத்தை இழந்து ஏழ்மையின் அடையாளங்கள் மறைக்கப்படுவதைக் காணலாம். இயேசுவின் பிறப்பின் செய்தியை எழுதிய புனித லூக்கா விண்ணகத்தூதர்கள் இடையர்களுக்கு செய்தியை அறிவித்ததைக் குறிப்பிடுகின்றார்.

''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!''

(லூக்கா 2:14)

அமைதியின் தூதர் இயேசு எமது உள்ளங்களிலும், இல்லங்களிலும், சிறப்பாக எமது நாட்டிலும் அமைதி அருள வேண்டி உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இயேசு கிறிஸ்தவில் உங்கள் அன்புக்குரிய ஆயர்

**பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம்**

ஆயர்
யாழ்ப்பாணம்.

## பேராயர் தினக்குறிப்.....

ஜூன் மாதம் 19 ஆந் திகதி எமது முன்னாள் பேராயரினதும், திருமதி அம்பலவாணர் அவர்களினதும் மூத்த புதல்வனின் திருமணம் வெகு விமரிசையாக உடுவிலில் நடைபெற்றது.

ஜூன் 28 ஆந் திகதி தென் இந்திய திருச்சபை பேராயர்களுக்கு ஞான ஒடுக்கம் நீர் கொழும்பில் உள்ள Phegasus Reef Hotelவில் ஆரம்ப மாகியது. 18 பேராயர்கள் பங்கு பற்றினர்.

ஜூன் 21 ஆந் திகதி காலஞ் சென்ற திருமதி சரஸ்வதி சோம சுந்தரம் அவர்கள் பெயரில் உடுவிலில் ஞாபகார்த்த கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் 8 ம் திகதி திரு என் யோகநாதனின் நூற்றொகுதி பேராயர் இல்லத்தை வந்தடைந்தது.

ஆகஸ்ட் 18 ஆந் திகதி கொழும்பிலிருந்து மெதடிஸ்த குருமார்கள் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

செப்டெம்பர் 1 ம் திகதி வன்னிப் பிரதேசத்தில் கனிஷ்ட இறையியற் கல்லூரி அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. வண அ ஜெயக்குமார் அதிபராக நியமனம் பெற்றார்.

செப்டெம்பர் 10 சத்தியபுரம் ஆலயத்திற்கு அஸ்திபாரம் இடப்பட்டது.

செப்டெம்பர் மாதம் 15ம் திகதி உடுவில் மகளீர் கல்லூரியின் 175ம் நிறைவு விழா ஆரம்பமாகியது,

செப்டெம்பர் மாதம் 21ம் திகதி திரு C. B பவிங் அவர்கள் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி துணை முதல்வராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

செப்டெம்பர் 25 ஆம் திகதி யூட் எம் சுதர்சன், பா தேவதாஸ், எஸ் குகனேஸ்வரன் செல்வி டெய்சி ஆசீர்வாதம் ஆகியோர் உதவிக் குருக்களாக அபிஷேகம் பண்ணப்பட்டனர்.

செப்டெம்பர் 30 ஆந் திகதி யூடோ பிறின்ஸ் கொழும்பில் நமது திருச்சபையை சந்திக்க வந்தார்.

ஒக்டோபர் 3 ஆந் திகதி அமெரிக்க தர்மகர்த்தர்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள புறப்படுதல்.

நவம்பர் மாதப் 15 ஆம் திகதி கலாநிதி டி ஜே துரைரத்தினம் அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்தார்.

நவம்பர் மாதம் 20 ஆந் திகதி வத்தளையில் புனரமைக்கப்பட்ட ஆலயம் திறந்து வைக்கப்பட்டது,

நவம்பர் மாதம் 29 ஆம் திகதி இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் புதிய கட்டிடம் துணைவேந்திரரால் திறந்து வைக்கப்பட்டது. பேராயர் அவர்கள் ஜெபம் செய்து கட்டிடத்தை ஆசீர்வதித்தார்,

டிசம்பர் மாதம் யாழ் குடாநாட்டின் கிழக்குப் பிரதேசத்திலும் பரந்தன் பகுதியிலும் சண்டைகள் அதிகரித்தன.

டிசம்பர் 18 ல் காரைநகரில் கிறிஸ்மஸ் ஆராதனை,

டிசம்பர் 21 ஆந் திகதி இலங்கையில் ஜனாதிபதி தேர்தல்.

# கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஜொலிப்பவை

**வட்டுக் கோட்டை ஞானியார்**

### கிறிஸ்மஸ் மரம் CHRISTMAS TREE

கிறிஸ்மஸ் கொண்டாட்டாத்தின் போது வீட்டின் நடுவே, நன்கு அலங்கரிக்கப்பட்ட மரமொன்றைக் காணலாம்.

இம் மரம் நாட்டும் வழக்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்று தெரியவில்லை!

மத்திய காலத்தில் ஜேர்மன் நாடுகளில் நடிக்கப்பட்டு வந்த வேதாகமக் கதைகளில் சுவர்க்க மரம்'' என ஒன்றினை நாட்டி அதனை ஏதேன் தோட்டமாகப் பாவிப்பது மரபாக விருந்தது. இந் நாடகங்கள் தடை செய்யப்பட்ட பின்னர் அம்மரங்களை வீடுகளில் நாட்டி அலங்கரிப்பது வழக்கத்திற்கு வந்து, பத்தொத்பதாம் நூற்றாண்டளவில் இவ் வழக்கம் ஐரோப்பாவெங்கும் பரவி விட்டது. 1841 ல் விக்டோரியா அரசியின் கணவர் அல்பேர்ட் என்பவரினால் இவ் வழக்கம் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆங்கிலேய நாகரீகம் பரவிய நாடுகளெல்லாம் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது மரம் நாட்டுவது சம்பிரதாயமாகி விட்டது.

### கிறிஸ்மஸ் பாடல்கள் CHRISMAS CAROLS

கிறீஸ்மஸ் கொண்டாட்ட தினங்களின் போது கிறிஸ்துவின் பிறப்பினைப் பற்றிய பாடல்களைப் பாடியும் கேட்டும் மகிழ்வது வழக்கம், 13 ம் நூற்றாண்டு வரை இயேசுவின் பிறப்பைப் பற்றிய பாடல்கள் ஆழ்ந்த சித்தாந்தத்தையும் சம்பிரதாயமான இசையமைப்பையும் கொண்டு விளங்கின. பின்னர் பிரான்ஸிஸ்கன் குருமார் என்னும் கத்தோலிக்க கட்டளைக் குரவர் சுவாரஸ்யமும் இனிமையுங் கொண்ட மகிழ்ச்சி தரும் பாடல்களைஇயற்றி பாடினார்கள் இப்படியான பாடல்களைக் கிறிஸ்தவ மக்கள் பயிற்சி செய்து விழாக்களிலும், தொழுகைகளிலும் இன்றும் பாடிவருகின்றனர். இப் பாடகர் குழுக்கள் கிறிஸ்மஸ் தினத்தில் கிறிஸ்தவர் இல்லந்தோறும் சென்று பாடுவது வழக்கத்தில் இருந்து வருகின்றது.

### கிறிஸ்மஸ் தாத்தா SANTA CLAUS

கிறிஸ்மஸ் பண்டிகையின் போது முழுநீள சிவப்பு அங்கி அணிந்து நரைத்த தாடி பருத்த தொந்தி கூனலான உடலமைப்புடன் தோன்றும் கிறிஸ்மஸ் தாத்தா கிறிஸ்மஸ் தினத்தில் தாராள மனப் பான்மைக்கும் மகிழ்ச்சிகரமான எண்ணங்களுக்கும் இலக்கணமாக விளங்குவார்.

நாலாம் நூற்றாண்டில் சின்னாசியாவிலுள்ள மயிரா என்னுமிடத்தில் தூய நிக்கலஸ் என்னும் ஒரு மேற்றிராணியார் இருநதார். தாராள சிந்தையுள்ள இவர் திருமண மாகாத பெண்களுக்கு சீதனமாகக் கொடுப்பதற்கு ஒரு மூடை பொன்னை பரிசளித்தார் குற்றுயிரில் விடப்பட்ட மூன்று மாணவர்களுக்கு உயிரளித்தார். என்று கதைகள் பல வழங்குகின்றன. எனவே இவரை மாணவர்களினதும் பிள்ளைகளினதும் அர்ச்சய சிஷ்டராக கொள்வர். இவ்வர்ச்சய சிஷ்டரின் தினத்திலே சிறுவருக்கான கொண்டாட்டம் நடைபெற்றது நாளடைவில் இத் தினம் கிறீஸ்மஸ் தினத்துக்கு மாற்றப்பட்டது.

கிறிஸ்மஸ் தாத்தாவை ஆங் ''கிலத்தில் Santa Claus'' என்று அழைப்பர். இது Saint Nicholas என்ற டச்சுப் பதத்தின் தழுவலேயாகும். இன்றும் ஒல்லாந்து தேசத்தில் கிறிஸ்மஸ் தாத்தா ஒரு மேற்றிராணியாருக்கு (Bishop) உரிய சம்பிரமான உடையிலேயே காட்சி தருகிறார் எனவே கிறிஸ்மஸ் தாத்தா என்ற சம்பிரதாயத்தை உருவாக்கியவர் அர்ச் நிககலஸ் என்னும் மேற்றிராணியாரேயன்றி இயேசுநாதர் அல்ல என்பது கவனிககப்பட வேண்டியது.

கிறிஸ்மஸ் தினத்தின் போது கிறிஸ்மஸ் தாத்தா பல பரிசுள்ள பெரும் மூட்டையுடன் வருவார், அப்பரிசுகளைப் பிள்ளைகளுக்கு வழங்குவார்.

கரோல் பாடும் குழுவுடன் இவரும் இணைந்து சென்றுவேடிக்கையாக ஆடுவது இப்போது வழக்கமாகி விட்டது.

## ஞாபகார்த்த ஆராதனை

இம் மாதம் 19ம் திகதி வெள்ளிக் கிழமை அமெரிக்காவில் காலமான டக்டர் D. J. துரைரத்தினம் அவகளின் பேயரில் ஒரு ஞாபகார்த்த ஆராதானை 22 ம் திகதி திங்கட்கிழமை கொழும்புத் தேவாலயத்தில் நடைபெற்றது

தென்னிந்திய திருச்சபை யாழ் அத்தியட்சா தீனமாக 1999ம் ஆண்டு அனுபவங்களுக்கு இறைவனை துதிககிறோம்,

''நான் மோசேசேயோடு கூட இருந்தது போல உன்னோடு கூட இருப்பேன் என்று வாக்களித்த இறைவனை நம்பி புதிய வருஷத்திற்குள் பிரவேகிப் போம். புதிய வருடம் நமது ஆதீனத்திற்கும் நமது நாட்டிற்கும் சிறப்பாக அமையும் என்பது நம்பிக்கை. கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக,

## • தாரகைஒளி

வாழ்க்கையை ஏளனம் செய்வதே வாழ்க்கைக்கு மிகமோசமான அணுகுமுறை
- தியோடர் ரூஸ்வெல்ற்

## ஒரு கதையைப் போல்

ஒரு கதையைப் போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப் போட்டோம் (சங் 90:9) என்றார், சங்கீதக்காரர். நாம் நேற்று உண்டானவர்கள் அல்லவோ? நாங்களென்ன தெரியும்? பூமியின் மேல் நமது நாட்கள் நிழல்களே என்று யோபுவின் புஸ்தகத்தில் வாசிக்கின்றோம்.

வாழ்க்கையைக் கனவு என்பர், கதையென்பர், கலையென்பர், எல்லாவற்றிலும் ஓரளவு உண்மையிருக்கின்றது

ஆனால் வாழ்க்கை என்ற கனவு சிலருக்குப் பயங்கரக் கனவு. சிலருக்கு சோகக்கதை இன்னும் சிலருக்கு விளங்கமுடியாத புதிர்.

முதுமையில் பலரும் ஒரு கதையைப் போல் எங்கள் வருஷங்களைக் கழிந்துப்போட்டோம் என்றுதான் எண்ணுகின்றனர்.

இதற்குக் காரணம் வாழ்க்கையை சரிவர விளங்கிக் கொள்ளாததே.

வாழ்க்கை என்பது ஒரு கலை, அதில் தேறுதல் கடமை. வாழத் தெரிந்தவர்களாக இருப்பதே நாம் மற்றவர்களுக்குச் செய்யக்கூடிய தொண்டு'' என்றார் மூதறிஞர் மு. வ.

நாம் இந்த வருடத்தின் இறுதி நாட்களுககு வந்துவிட்டோம். அவசரம், ஓட்டம், பொருள் தேடல், நின்று யோசிக்கவே நேரமில்லை. இந்த வருஷத்திற்கான ஆவிக்குரிய ஜீவியத்தின் கணக்கு வழக்குகளைத் திருப்பிப்பார்ப்போம். வர்த்தக நிறுவனங்களைப் போல் இருப்பு நிலையை ஆராய்வோம் (Stock Taking) வாழ்க்கையைச் சீராக்கிக்கொள்ள அதுவே சரியான பாதை. இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்த அதே நிலையிலேதான் இன்றும் இருக்கின்றோமென்றால் வாழக்கையின் அர்த்தம் எங்களுக்குப் புரியவில்லை என்பது பொருள்.

வாழ்க்கை இன்பக்கரமானது. அதனைச் சரிவர விளங்கிக் கொள்ளாதவர்களே சோகக்கடலில் மூழ்குகின்றனர். ஆபத்து வரும் நேரத்தில் மட்டும் இறைவனைத் தேடுபவர்களே பலர். (There is no atheist in the foxhole) அவர்கள் இன்பமாகவிருப்பது அரிது.

வாழ்க்கையை இன்பக்கனவாகவும் மகிழ்ச்சிக்கதையாக்குவதும் இறைவனே அந்த ஊற்றில் நாம் ஓயாது பருகுகின்றபோது 'வாழ்க்கை வீண்' என்ற எண்ணம் ஏற்படாது.

எஸ். ஜே. எழுதுவது

# முத்தான புத்தகம்

**J. S** கிறிஸ்மஸ் போதகரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்'' என்ற ஓர் அருமையான நூலை வண. N. கதிரவேலு தாம் மரிப்பதற்கு முன்னர் என்னிடம் தந்தார். இது அவருடைய மாமனார் வண E. K. இயேசுதாசன் சேர்த்த நூல்களிலொன்று.

கிறிஸ்மஸ் போதகர் 1823 ம் ஆண்டு பிறந்தார். 1904 ம் ஆண்டு மறுமைக்குள் பிரவேசித்தார் வட்டுக்கோட்டைச் செமினரியின் பழைய மாணவர். அங்கிலிக்கன் திருச்சபையிலும் பின்னர் அமெரிக்கன் மிஷனிலும் பணியாற்றியவர்.

சிறந்த கவிஞர், பக்திமான்; அருமையான பிரசங்கி; ''உச்சித மோட்ச பட்டணம் போக'' என்ற கீர்த்தனை இவர் இயற்றியது. இந்தப் புஸ்தகத்தில் கிறிஸ்மஸ் போதகரின் கடிதங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் அன்பு, பக்தி, எளிமை, நேர்மை, ஆதியாம் பண்புகள் இழையோடுகின்றன. கடிதங்களில் உள்ள சில சிந்தனைகள் பின்வருமாறு.

''நாம் நமக்கு அன்பானவர்களை விட்டுப் பிரிந்திருந்தாலும், நம்முடைய காகிதங்களினால் அவர்களுடன் சம்பாஷிக்கலாம. ஒழுங்காய்க் காகிதமெழுதுவதினால் அவர்களுடைய அன்பையும் நேசத்தையும் குறைவிடாமல் செய்யலாம்.''

☆ ☆ ☆ ☆ ☆

''பேதி வியாதி உவ்விடத்தில் அதிக மும்முரமாயிருப்பதையறிந்து நமக்கு அதிக விசனத்தை கொடுத்தாலும், எங்கள் அருமையான பிள்ளைகளே உங்களை நாங்கள் சீவனுள்ள தேவனாகிய யேகோவாவிடத்திலுறுதியான விசுவாச மூலமாய் ஒப்புககொடுத்து வருகிறதினால் மெய்யாகவே பயப்படாமலிருக்கிறோம் ''வாதை உன் கூடாரத்தை அணுகாது'' என்றதே தேவவாக்குத்தத்தம் இது எங்கள் நம்பிக்கைக்கு உறுதிப்பத்திரம். இந்த வாக்கை நம்பிக்கொண்டு 91 ம் சங்கீதத்திலே சொல்லப்பட்ட சர்வவல்லவருடைய அடைக்கலத்தை எப்போதும் கருத்தாய் தேடிருங்கள்''

24-12-1888

⁂ ⁂ ⁂ ⁂

''மகனே கர்த்தருக்கு ஊழியம் செய்வதைப்போல இந்த உலகத்தில் நமக்கு உண்மையான மனப்பாக்கியத்தை வேறொரு தொழிலும் கொடுக்க மாட்டாது. தேவன் உம்மையே இந்த ஊழியத்துக்கு தெரிந்து கொண்டாரென்றது போல தோன்றுகின்றது. என்னுடைய மனதில் இதைப்பற்றி அனேக காலமாய் யோசித்துக் கொண்டே வருகிறேன். கர்த்தர் தந்த அருமையான முதற்பேறான மகன் நீர் தான். உம்மைத் தேவனுக்கென்றே பிரதிஷ்டை செய்தோம்.

9-6-1892

☆ ☆ ☆ ☆ ☆ ☆

கிறிஸ்துவுக்கு நம்முடைய இருதயத்தை ஒப்புக்கொடுத்து விடுவோமானால் அதில் வருகிற சந்தோஷம் எல்லையற்றதாயிருக்கும் மகனே சோதித்துப்பாருங்கள் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் நாங்கள் செபம் பண்ணாத நாளில்லை. நீங்களும் அப்படிச் செய்து வருகிறீர்களா? செய்து வருகிறீர்களென்று நம்புகிறேன்.

2-10-1995

⁂ ⁂ ⁂ ⁂

''மகனே மனுஷனையும் பிரபுக்களையும் நம்பவேண்டாம். ஆனால் அன்புள்ள இரட்சகரில் மாத்திரம் நம்பிக்கை வைப்போமானால் அது நம்மை வெட்கப்படுத்தமாட்டாது.

14-14-1896

⁂ ⁂ ⁂ ⁂

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியது போல நானும்



சொல்ல ஏவப்படுகிறேன். நாம் வறியவர் களாயிருந்தும் செல்வர்களாயிருக்கின்றோம் இதெப்படி? இயேசுக்கிறிஸ்து எங்களுக்கு எல்லாமுமாயிருக்கிறார். அவரே எங்கள் பொக்கிஷசாலை எங்களுக்கு வேண்டியயாவையும் அந்தப்பொககிஷப் பெட்டியிலிருந்து அள்ளிக் கொள்கிறோம். மகனே நீரும் உம்முடைய பிள்ளைகளும் இப்படிப்பட்ட பொக்கிஷப் பெட்டியை நிச்சயம் உள்ளவர்களாயிருப்பீர் களாக

25-1-1900

☆ ☆ ☆ ☆ ☆ ☆

மகனே எவ்வளவு வில்லங்கங்கள் வந்தாலும் எல்லாம்

(4ம் பக்கம் பார்க்க)

## தேற்றரவுப் பணி

'இறைவன் நம்மைத் தேற்றியவாறே
நாமும் பிறரைத் தேற்றுவோம்!'

இறைவன் எம்மைத் தேற்றி ஆற்றியபடி நாமும் மற்றோரைத் தேற்ற வேண்டிய ஒரு உடனடித் தேவை இன்றைய சமூகத்தில் உள்ளது.

கிறிஸ்து பிறப்பு நாட்களிலே, கிறிஸ்துவின் பணியானது, ஆட்டு மேய்ப்பர்களுக்கும், வான சாஸ்திரிகளுக்கும், கிறிஸ்துவின் தேற்றரவு தேவை என்பதை அடிப்படைக் கருத்தாகக் கொண்டுள்ளது அதாவது தாழ்வு நிலையில் இருந்த மேய்ப்பர்களுக்கும் உயர்ந்த நிலையில் இருந்த வான சாஸ்திரிகளுக்கும் தேற்றரவின் அவசியத்தை கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி எடுத்துக் காட்டுகின்றது. கிறிஸ்து நமக்குத் தேற்றரவாளனாக இருக்கின்றார் என்னும் போது அவரின் திருச்சபை தேற்றரவுப் பணியைச் செய்ய வேண்டுமென்பதே இறைவனின் விருப்பாகும் இன்று நம்மத்தியில், இடம்பெயர்ந்தோர், அகதிகள், விதவைகள், பெற்றோரை இழந்தோர், பாலியல் வன்முறைக் குட்படுத்தப்பட்டோர், கொலை, களவு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் எம் கண்முன்னே உள்ளனர். இவர்களை நம் திருச்சபைகள் ஆற்றித் தேற்ற வேண்டிய நிலையில் உள்ளன.

இயேசுவின் திருப்பணியின் ஆரம்பம் லூக்கா 4:18 ன்படி சமூகத்தில் பராமரிப்பற்ற நிலையில் வாழுவோர்க்கே என்பது தெளிவாக்கப்படுகின்றது

'தரித்திரருக்குச் சுவிசேசத்தைப் பிரசங்கிக்கும்படி, என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும் வந்தேன்'' என்றார்

கிறிஸ்து இயேசு பராமரிப்பற்றோர். மீது காட்டிய மனவுருக்கம் மிக்க அன்பு, அவரது வாழ்வின் அனுபவத்தின் உள்வாங்கலாகத் தெரிகின்றது அவர் இறைவனாக இருந்தும் இறைத் தன்மையைத் துறந்து மனிதரில் ஒருவராகி மற்றவரை எப்படித் தேற்றி ஆறுதல் படுத்த வேண்டுமென்று கற்பித்துள்ளார்.

எனவே தேற்றரவுப் பணியானது சமூகத்தில் தாழ்வு, உயர்வு ஆகிய நிலகளிலுள்ளோருக்கும் எல்லாமட்டத்தினருக்கும் திருச்சபை செய்ய வேண்டிய பிரதான பணியாகும் புத்தாயிரமாண்டில் திருச்சபையின்பணி கிறிஸ்து பிறப்பின் மையக் கருத்தை, (தேற்றரவுப்பணி) உள்ளடக்கியதாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

வண. க. கருணாசேகரா
முகாமைக் குரு
மெதடிஸ்த் திருச்சபை
யாழ் சேகரம்

# பேராயர் தினக்குறிப்பிலிருந்து

1999 ஆண்டின் கடைசி நாட்களுக்கு வந்துவிட்டோம். 2000 ஆண்டை வரவேற்க தயாராகின்றோம்.

கடந்த போகின்ற வருடத்தை நினைத்து பார்க்கும்பொழுது நமது ஆதீனமாக கடவுளுக்கு அதிகம் நன்றி செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ்வருடம் சினட் மகா சபையின் விசேட கூட்டத் தொடருடன் ஆரம்பமாகியது. அதன் புதிய யாப்பில் பேராயர்கள் குறைந்த பட்சம் 50 வயதுக்காரராக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்சப் பட்டது. இந்த புதிய யாப்பு 2000 ஆம் ஆண்டு நடைபெறுகின்ற சினட் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனவரி மாதத்தில் நமது திருச்சபையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய கலாநிதி டி. எஸ் தியாகராஜா ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் மிஷன் மற்றும் நற்செய்தி பணியின் செயலாளரானார். இவருடைய பதவி நமது திருச்சபைக்கும் யாழ்பாண பல்கலைக் கழகத்திற்கும் கிடைத்த பெரும் கௌரவமாகும்.

இவர் யாழ் பல்கலைக் கழகத்திற்கு தான் ''புதிய ஏற்பாடு'' பற்றிய தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

ஜனவரி மாதம் 25ம் திகதி ஆச்சிரமத்தின் சிற்றாலயத்தை திறந்து வழிபாடு செய்தோம். அடுத்த தினமே சாம் அண்ணன் மறுமைக்குள் பிரவேசித்தார். கண்ணீருடன் பிரியாவிடை நல்கினோம்.

ஜனவரி 29ம் திகதி பேராயர் இல்லத்துக்கு ரெலிபோன் வசதிகள் வந்துசேர்ந்தன.

பெப்பிரவரி மாதம் 26ம் தேதி கொட்டைக்காட்டில் உள்ள சமாதானக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியினர் புதிய தேவாலயத்தை அமைத்துக் வழிபாட்டினை ஆரம்பித்து வைத்தனர்.

ஏப்பிரல் மாதம் 5ம் திகதி திருமதி கிறேஸ் பத்மினி சுகுணானந்தன் அவர்களின் நினைவாக லீவை ஸ்போல்டிங் சிறுவர் இல்லத்தில் துணைவேந்தர் திரு பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்களால் நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது

ஏப்பிரல் 9 ஆந் திகதி தென் இந்திய திருச்சபையின் பேராயர் அதி வண. வில்லியம் மோசஸ் கொழும்பில் வந்திறங்கினார்.

ஏப்பிரல் 10 ஆந் திகதி நுவரெலியாவில் பேராயர் டி ஜே அம்பலவாணர் நினைவு பெண்கள் விடுதியும், பிறின்ஸ் ஆண்கள் விடுதியும் தலைமைப்பேராயரினால் திறந்து வைக்கப்பட்டன.

நுவரெலியாவில் புதிய ஊழியனாக வண அந்தோனி சவரிமுத்து பொறுப் பேற்றார்.

மே மாதம் 1ம் திகதி ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். வன்னிப் பிரதேசத்தின் சில ஊழியர்களான வண. விபத்மதயாளன் வண. போல் சுரேஷ், வண யோன் செல்வம், வண ஜீ ஞானப்பிரகாசம் ஆகியோர் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்தில் பணியாற்றி வருகின்றனர்

மே மாதம் 9ஆம் தேதி திருபி தேவராஜா அவர்களுடைய டிப்புளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது. பிரதம உரையை வண. கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் வழங்கினார்.

மே மாதம் 29 ஆந் திகதி யாழ்ப்பாணக கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கலாநிதி ஈ ஏ சம்பியன் அவர்கள் பேரில் கனடாவில் நடந்த ஞாபகார்த்த கூட்டத்தில் அருள் உரை ஆற்றும் வாய்ப்பு கிடைத்தது

ஜூன் இரண்டாம் திகதி சுவிற்சிலாந்து சபைகளுக்கும் விஜயம்பல சபைகளைச் சந்தித்து அருளுரை வழங்குதல் நடைபெற்றது.

### ஜெனிவாவில் உள்ள உலக திருச்சபை மன்றிற்கு அழைப்பு

உலக திருச்சபை. மன்றின் முக்கிய தலைவர்களுடன் குறிப்பாக சர்வதேச விவகார செயலாளருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

(2 ம் பக்கம் பார்க்க)

## முத்தான...

அலுதியான காலத்தில் தீர்ந்து போகிறது. இப்படியாவது எங்கள் செயலல்ல கர்த்தரின் செயலே மகனே கர்த்தர் எங்கள் பக்கத்தில் இருக்கிறார். என்பதற்குச் சந்தேக மில்லை கர்த்தரை நம்புகிறவர்கள் என்றும் அசைக்கப்படாமலிருக்கின்ற சீயோன் பர்வதத்தைப்போலிருக்கள்'' என்று வேதம் சொல்லுகிறது ஆகையால் நாம் பயப்படவேண்டியதில்லை.

25 - 1 - 1900

☆ ☆ ☆ ☆ ☆

மகனே பயப்படவேண்டாம் கர்த்தர் நம்முடைய பட்சமானால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? யோசுவா முதலாம் அதிகாரத்தை வாசியும் பயப்படாதே பயப்படாதே என்று மூன்று முறை வற்புறுத்தி ஆண்டவர் பேசினார்.

☆ ☆ ☆ ☆ ☆

ஒவ்வொரு நாளும் வேதம் வாசியாமலும் சமுசாரக் கூட்டம் வையாமலும் விடாதிருங்கள்.

5 - 11 - 19900

கிறிஸ்மஸ் போதகர் 1904 ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தில் மரித்தார். மகள் ராசம்மாவின் மடியில் படுத்து மரிப்பதற்கு முன் ஆயத்தம் ஆயத்தம் என்று மூன்று முறை கூறினார்.


## வாழ்த்தி வணங்கி வரவேற்போம்

காலங் கடந்த நிலையில் விளங்குபவன் இறைவன் ஆனால் ஆன்மாக்களாகிய நாங்கள் காலத்துக்குட்பட்ட நிலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறோம் அவற்றை முன்னிட்டு இறையருளை நாடிநிற்கும் நிலை எம்மை வழிநடத்துகிறது. பெருகலாம் தவம் பேதமை தீரலாம். 'திருகலாகிய சிந்தை திருத்தலாம்'

என்பதற்கிணங்க காலம்தோறும் வருகின்ற புண்ணிய தினங்களில் எமது வழிபாட்டை மேலும் மேலும் விஸ்தரிக்கிறோம் இதனால் ஒவ்வொருவரும் தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

'அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்குமாற்றி மனத்துளே பேதா பேதம் பொய்வஞ்சம் களவு, சூது, சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம் வேறொன் றுண்டோ'' என்றார் ஒரு பெரியார். இந் நிலையில் நடப்பாண்டின் பூர்த்தியும் எதிர்வரும் ஆண்டின் தொடக்கமும் பெரிதும் வரவேற்கத்தக்கது. கடந்தகால அல்லற்பாடுகளை மறந்து எதிர்வரும் புத்தாண்டில் அமைதி நிலவ வேண்டும். என்ற பிரார்த்தனை அனைவர் உள்ளத்திலும் மேலோங்கி நிற்க வேண்டும். மார்கழித் திங்களில் இடம்பெறும் திருவெம்பாவை விழா, நத்தார்விழா என்பவை பழம்பெரும் பண்பாட்டை உணர்த்துபவை அதனை அடுத்து வரும் புத்தாண்டு அனைத்து மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியை அளிக்கும் இரண்டாயிரமாம் ஆண்டாகும் இதனை உவகை பொங்க வரவேற்று இறைவனை உள்ளத்திருத்தி அன்பு கருணை ஈகை ஒப்புரவு வாய்மை என்பவற்றால் இவ்வுலக வாழ்வை வளமாக்குவோமாக

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா



## வாழ்த்துச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்!

மலரும் புத்தாயிரமாண்டில் உதயதாரகை மூலமாக வாழ்த்துத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். அறிவும் சிந்தனையும் வளர்ச்சி அடைந்திருக்கும் இக்காலத்தில் சமயக் கோட்பாடுகளும், மனித நேயங்களும வளர்ச்சியடைய ஏங்கித் தவிக்கும் இக்காலத்தில், இரண்டாயிரமாண்டு நல்லதோர் சூழ்நிலையை உருவாக்க சிந்திப்போமாக.

தென்னிந்திய திருச்சபையின் அனுசரணையுடன் வெளியாகும் உதயதாரகை மக்களுக்கு வேண்டிய நற்கருத்துக்களைத் தந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இரண்டாயிரமாண்டில் மக்கள் சிந்திக்கவும் செயல்படவும் கூடிய வகையில் இச் சஞ்சிகை வெளிவருவது வரவேற்கத்தக்கது. மலர்ந்துள்ள புத்தாயிரமாண்டில் மக்களின் எதிர்பாப்புக்கள் யாவும் நிறைவேற்றவும் அனைவருக்கும் மன அமைதியையும் இறையருளையும் தர பிரார்த்திக்கின்றோம்.

'வாழ்க வளமுடன்'
'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

## OBITUARY

Dr. D J Thuriratnam son of late Mr & Mrs. K C Thuriratnam passed away in Bowling Green, Ohio Uniied States on Friday the 19th November 1999. He had been suffering from Lungs failure for the past six months

He leaves behind, his wife Sheela (Nee Dayarmms) Rajesh (son) and Periya (daughter.)

A Service of Remembrance was coddacted at the CSI Church Colombo on Monday the 22nd November 1999, at which our Bishop preached.

## 21st Death Anniversary

of our dearly beloved mother

Mrs. Kanagammah Subramaniam



(Kanaga Teacher of Manipay Memorial, Drieberg, Moolai AMTM. and Arwnodhaya)

Called Home 7 01- 1979

Deep in our hearts lies a picture
Worth more than treasures untold
The image of a beloved mother
Whose memory will never grow old

Inserted by her loved ones in Sri Lanka, and Australia

*Bishop's House*
*Vaddukoddai.*

## *10th Death Anniversary*

of our dearly beloved sister

*Mrs Irene Padmini Arulrajah*



Daughter of late Mr & Mrs EDWIN SAMUEL of St Edwin's Manipay.

Born 11. 03. 1942 Died 30. 12. 1989

Sadly missed and fondly rememberd by her brothers and sisters,

Mrs V. Paul
College flats,
Vaddukoddai

### DR. P. SINNADURAI

The death occured of Dr. Ponniah Sinnathurai Joseph of Point Pedro, on 3rd November 1999.

The funeral took place on the following day at Point Pedro. He leaves his wife Rasamani and his son Pretheepan

### Mr Thuraiappah Selvartnam Mann

We are sorry to record the death of Mr. Thuraiappah Selvaratnam Mann which took place at Kerudavil, Chavakachcheri on 22nd November 1999.

The funeral service was conducted at his residence at Kerudavil on the 27th November 1999. Rev. T. H Vasanthakumar the Parish Parish conducted the Funeral service assisted by Rev P. J. Suriakumar and Bro. S. Kuganeswaran.

The committal rites at the Chavakacheri cemetery was performed by Rev. T. H. Vasanthakumar.

### Mrs. R. N. Duriratnam

We are sorry to record the death of Mrs. R. N. Durairatnam, retired teacher, Jaffna, Central College, which took place in Colombo on the 15th of December 1999. The funeral took place at her residence on 17th of December 1999. Her husband Mr. J. A. Durairatnam died some years ago. She leaves behind Sarojini Gunaratnam (Canada), Shanthi Puvenendra and Suhanthi Edwards (Daughters) and Thayaseelan and Gnanaseelan (Sons)

## *JAFFNA SANS VISITORS*

Because of the escatation of the ciuil war, no foreign repatriate visitors came to Jaffna for Christmas.

## *Death due to Sanke Bite*

Miss Arumugam Abirami (12 years old) was bitten by a cobra on 15th December 1999. She was treated at Manthikai Base Hospital. From there she was taken to Jaffna Teaching Hospital. She died when the vehicle went near Vallai Bridge.

### *Jaffna Hindu College Student Comes First in the G. C .E. (Advanced Level) Examination*

A Jaffna Hindu College student has scored the highest marks at the Advanced Level Examination held in August 1999. At Royal College 32 students, Visaka Vidiyalai 27 students, at Bambalapitya Hindu College 10 students obtained 4 A's at this Advanced Level Examination.

## BIBLE SUNDAY



Sunday the 5th December was observed as Bible Sunday in all our Churches: We congratulate the energetic General Secretary of the Ceylon Bible Society Viz Mr. Elmo Wijesinghe for his services to the society for more than ten years. We also pray to God almighty for his mercy and wisdom when the Bible Society is on look out for a successor to Mr. Elmo Wijesinghe

### What they say about the Bible

1 It is impossible to rightfully govern the world without God and the Bible
— George Washington.

2 Bible is the best book in the world
John Adamas.

3 Take all of this book upon reason that you can and the balance by faith and you will live and die a better man.
Abraham Lincoln

4 The Bible is the word of life. I beg that you will read it and find out for yourself.
— Woodrow Wilson

5 Almost everyman who has by his life work added to the sum of human achievement of which the race is proud, almost every such man has based his life-work largely upon the teachings of the Bible.
Theodore - Roosevelt

6 The soul can never go astray with this book for its guide
— Napolean Bonaparte

7 I have always said, I always will say that the studious perusal of the sacred Volume will make better citizens, better fathers and better husbands
— Thomas - Jefferson

8 I believe knowledge of the Bible without a College course is more valuable than a College course without a Bible
— William Lyon Phelps

9 No lawyer can afford to be ignorant of the Bible
Rufus Choate

(Continued on Page 6)

# New Year Special Issue

# Christmas 1999

## OURSELVES

With this issue we complete hundred and fifty eight years of our publication. As we do so we are filled with thanksgiving to God for the wonderful manner in which He had helped us to enjoy an uninterrupted record of hundred and fifty eight years of service. The management of the paper changed hands from the American Ceylon Mission to private individual, then again to the American Ceylon Mission. Now it is with the Jaffna Diocese of the Church of South India. These different managements deserve high praise for steering the paper through diffi cult periods. In its continued service various distinguished Editors, some of them intellectual saints of their time, have laboured to make this paper serve its purposes. To all Managers and Editors the "Morning Star" owes deeply. During the past hundred and fifty eight years many English weeklies sprang up in Jaffna. Because of the rising costs and lack of public and financial support they have all disappeared. We not only exist but continue to live abundantly The Morning Star issues from a modest 19th Century Press at Vaddukoddai fly to the five continents of the world. Till nineteen sixty seven Annual subscription was Rs. 12/- per year and a single copy was thirty cents. Now we are forced to increase our Annual Subscription to Rupees One Thousand and cost of one copy is Rupees Ten. We are happy most of our subscribers accept this change without raising their eyebrows. It is the duty of our people in Sri Lanka and abroad to support this paper. The American Missionaries who came from the most enlightened socities of the world viz: Massachuesettes felt that a News Paper is a prime requisite of a civilized society. The Morning Star has recorded hundred and fifty eight years of Jaffna history.

Our appeal today though primarily intended to our subscribers; we would like as many as can, to help us with their articles, letters and news items. Because we do, not have reporters and an array of regular contributors, the paper cannot be made as people would like to have it. While we are happy to receive appreciative comments and adverse criticism on what appears in the paper, we are sorry those who help with news and other material are woefully very few. May we take this occasion to appeal to all those who can help be.

The fever will not be completely cured. There will be times when it goes very high But sometimes ti can be almost normal". This was the comment on the Sri Lanka situation, some years back.

When we think of the present escalation and euphoria in 1994, we realize how true it was. On November 2nd 1999 the militants lanuched another offensive code named "Unceasing Waves III, (Oyatha Alaigal III). It bagan at Oddusdan an agricultural village North East of Mankulam. The Government embarked on an ambitious programme on 13th May 1997 code named "Sure Victory". Goverment announced the primary motive of this offensive was to find a new land route to Jaffna. But after reaching Mankulam a town about 30 miles from Vavuniya town, Government wound up the operation. The Militants organised its resistance most meticulously: Military training was given to all people of all age groups. Village Regiment, Defence Regiment and Supportive Regiment were formed. Many months of prepration went into the organisation of Unceasing Waves III".

On the midnight of 2nd of October 1999 there was a Three pronged attack from Oddusudan, heading South to Mankulam, North towards Puliyan. kulam and East towards Nedunkerny. Artillery shell and motar shells gave them the sting.

Nednkerni, Mankulam Kanakarayankulam and Puliankulam, an area about 1000 sq miles came under the control of the Militants.

Weli Oya the small srtip lying between the fo rmer Northern Province and the former Easten Province also came under attack. At this time Militants announced that they were going to attack Vavuniya and urged the residents to leave the town. Subsequently the militants went to Mannar District and took control of Manthi A G A Division. During this offensive the Madu Church was attacked and some displaced persons living there were killed. We do not know who was responsible for the killing at the Madu Church After a lull the "Unceasing Waves III" turned towards Jaffna peninsula. Elephant Pass is an important out post at the Southern Coast of Jaffna Peninsula. Knowing the stategic importance Government had been strengthing this post since the I P K F left in February 1999 Government fortified it with a Naval Base at Vethilaikerny - Kottakadu and an Army Camp at Paranthan. The Militants took control of these two establishments and are going close to Elephant Pass. They asked the residents along the North East coast and of the peninsula and in areas near Elephant Pass to vacate and move into interior parts of Thenamarachy.

The Army in the North announced that they were resisting the Militant's offensive and they will not allow an inch of land to be captured by the militants within the Jaffna Peninsula. The Government Radio is also brodacasting conversations and interviews in Tamil about the dangers of the militant rule.

But the Jaffna man after 16 years of Civil War is only inclined to keep away from the conflict and salvage their lives and the little wealth they have.

In the meantime the Presidential election campaign has become tensed and marked with many incidents of violence. The Government and the Opposition are blaming each other for the present crisis. But the people of Jaffna have no intrest in the Government and polities of Colombo.

## H. A. Krishnapillai Festival

The Christian Theological Seminary at Maruthanamadam is planning to celebrate Poet H. A. Krishnapillais day on Saturday the 29th January.

### *A Vehicle for our Worker in Colomto*

The Colombo Church in collaboration with the Diocese and Rev. Suthenthira Sivalingham of Canada is planning to buy a new car for our Minister in Colombo. It is hoped that this will be given on the Christmas day in 1999.

### *Bible Study...*

10 The New Testament is the very best book that ever will be known in the world — Charles Dickens

11 Bible reading is an education ctself — Lord Tennyson

12 There are more sure marks of quthencity in the Bible than in any profance history — Sir Isaac Newton

### *Rupees Five Thousand Fine For Illicit Brew*

Mr. N. Sabanathan Magis trate, Mallakam, fined Rs. 5000/- a person for selling illicit liquor.

## University Closes For Vacation

The University of Jaffna closed for Christmas vacation on Friday the 17th December 1999. It will re - open on the 17th of January 2000.

## OBITUARY

### *Mrs Magadelene Elizebeth Gurupatham*

The death occurred on Thursday the 9th December 1999. of Mrs. M. E. Gurupatham, wife of late Mr. S. Gurupatham of the Valuation Depatment. She was 72 years old at the time of her deat. The funeral took place at her residence at Racca Road, Chundikuli, on Saturday the 11th December 1999. She leaves behind Sarojini and Vijalakshmi (U. K.) (daughters) and Suthan (Michigan, U S A) and Vino (sons) The funeral service was conducted by the Rev. K. Karunasekara Superintendent Minister, Jaffna. The tribut was paid by the Rev. Jeya Mather of Kaddaiveli. The remains were then removed to Kottadi cemetery for interrment.

## Jeyasuthan Leaves for Middle East

Mr. T. Jeyasuthan who had been serving as telephone operator in the B'shop Office will be leaving for Middle East shortly "The Moring Star" records its thanks to Mr. Jeyasuthan for his assistance during the past one year.

## Welcome to Freshers

The Christian Civilization students of the University of Jaffna conducted a worship service and tea - party to welcome the new students who had joined the department The function took place at the Good Shepherd Catholic Centre on Monday the 20th December The function was attended by lecturers and visiting lecturers viz Rev. Dr. Anton Matthis Rev. Fr. G. Pilendran, Rev. Fr. R. Rajanayagam, Rev. J Jebamohan, Rev. T. Thavanesan, Miss. N. Nalliah and Rt. Rev. Dr. S. Jebanesan.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 31st Deceber 1999 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.